செ.வெ.எண்: 13 நாள்: 06.01.2017

# பத்திரிகைச் செய்தி

## படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படையிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும் இந்த திட்டம் தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு ஆணை எண்.80, நாள்:30.07.2010-ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புடித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க உற்பத்தி பிரிவின் கீழ் ரூ.5 இலட்சம் வரையிலும் சேவைப்பிரிவில் ரூ.3இலட்சம் வரையிலும், வியாபாரங்களுக்கு ரூ.1 இலட்சம் வரையிலும் உள்ள கடன் திட்டங்களுக்கு கடன் பெற வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு ஆணை எண்.35, நாள்:11.11.2016-ன்படி உற்பத்திப்பிரிவில் ரூபாய் 5 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாக உயர்ததப்பட்டு அதற்கான மானியத்தொகையின் உச்சவரம்பு ரூபாய் 1,25,000/-மாக வரையறுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற குறைந்தபட்சம் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். இது வயதுவரம்பு பொதுப்பிரிவினருக்கு 18 முதல் 35 வயது வரையிலும், சிறப்பு பிரிவினர் மற்றும் பெண்கள் 18 முதல் 45 வயது வரையிலும் இருக்கவேண்டும். ் குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 1,50.000/-க்கு மிகாமல் இருக்கவேண்டும். திட்ட மதிப்பீட்டில் பொது பிரிவினர் 10 சதவீதமும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், மகளிர் மற்றும் திருநங்கைகள் 5 சதவீதமும் தமது பங்காக செலுத்தவேண்டும்.

திட்ட இலக்கீடாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2016-17-ம் நிதியாண்டில் 125 நபர்கள் பயன்பெற ரூபாய். 62.50 இலட்சம் மானியம் வழங்க தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**